# SEN NEXUS

## Dr.KAVISEN Academy | Book Write Now Hub | SEN Arts & Cultural Forum & ULAGA THAMIZHAN PATHIPPAGAM

Jointly Organized By

# 3rd SEN Teachvision 2023 International Multidisciplinary Symposium

## THEME

## TEACHVISION - 2023 INTERNATIONAL CONFERENCE

## "Shaping Education for a Brighter Future"

கருப்பொருள்

2023 - "தொலைநோக்கு கற்பித்தல் கருத்தரங்கம் - ஒளிமயமான எதிர்காலத்திற்கான கல்வியை வடிவமைப்பது"


EDITOR-IN-CHIEF

DR.R.KAVITHA SENTHILNATHAN
DIRECTOR - SEN NEXUS

DR.KAVISEN ACADEMY | BOOK WRITE NOW HUB |
SEN ARTS & CULTURAL FORUM | SEN TRAINER'S TEAM

| S NO | CONTENT | NAME | P NO |
|---|---|---|---|
| 1 | மெல்லக் கனவாய்ப் பழங்கதையாய் புதினம் மார்க்சியப் பெண்ணியப் பார்வை | இளமுனைவர் பழ. கலைவாணி பாண்டியன் | 1-6 |
| 2 | தமிழிலக்கியங்களில் உணர்வெழுச்சிகள் | முனைவர் பெ.தமிழ்ச்செல்வி குணசேகரன் | 7-10 |
| 3 | தமிழிலக்கியங்களில் வணிகவியல் உத்திகள் | முனைவர்.பா.சரளாதேவி | 11-15 |
| 4 | தற்போதைய கல்வி முறை இப்படி இருக்க வேண்டும் என்று என் மனதில் உதித்தவைகள் | கோ.கலைப்பிரியா | 16-21 |
| 5 | Toward A Sustainable Future In Biology Teaching Innovations And Challenges | Dr. S. Nagaraj & Dr. D. Vasantharaja | 22-24 |
| 6 | மாணவரின் வெற்றிக்கு பெற்றோர் ஆசிரியர் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் | முனைவர் பெ. கலைச்செல்வி | 25-30 |
| 7 | Creating Awareness on the Utilization and Disposal of Plastic Waste in Kanniyakumari District | Dr. K. Vijayakumar | 31-33 |
| 8 | மாணவர்களின் வெற்றிக்காக பெற்றோர் ஆசிரியர் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் | Dr. அ. ஜமீலா | 34-36 |
| 9 | பழமொழி நானூறு உணர்த்தும் கல்வி | முனைவர் கா. ராஜகுமாரி | 37-39 |
| 10 | Innovation In Management Education | R. Kaliamoorthy | 40-42 |
| 11 | தமிழ்க்கல்வி கற்றல் கற்பித்தல் வடிவமைப்பு முறைகள் | முனைவர் வை.நம்பித்தாய் | 43-50 |
| 12 | Shaping Education for a Brighter Future in English Language | Prabhakar R | 51-53 |
| 13 | FROM A TO Z FUN AND EFFECTIVE ALPHABET ACTIVITIES FOR KINDERGARTENERS | V. Prabha | 54-59 |
| 14 | கல்விமுறைகளின் நோக்கும் போக்கும் | வா.அகல்யா | 60-63 |
| 15 | ஔவையார் எடுத்துரைக்கும் கல்விச் சிந்தனைகள் | திருமதி மு. பழனியம்மாள் | 64-67 |
| 16 | கற்றல் – கற்பித்தல் நெறி | முனைவர் ப.புஷ்பலதா | 68-70 |
| 17 | Teaching Feminism Mary Wollstonecraft's Maria, or The Wrongs of Woman | Marie Josephine Aruna | 71-73 |
| 18 | தமிழ் மொழியைக் கற்பிக்கும் திறன்கள் | முனைவர் நா. காயத்ரி | 74-77 |
| 19 | கற்றல் கற்பித்தலில் இசைத்தமிழ் அறிவும் தெளிவும் | முனைவர் இரா. வசந்தமாலை | 78-80 |
| 20 | Professional Development Of Teacher In Teaching And Teacher Education | MRS. S. Vanitha | 81-84 |
| 21 | எடுத்துரைப்பியல் நோக்கில் கபிலரின் அகப்பாடல்கள் கற்றல் முறை | முனைவர் க.இலட்சுமிதேவி | 85-89 |
| 22 | A Study On Home Adjustment And Academic Achievement Among Higher Secondary School Students | K.T.Poonthalir & Dr.T.S.Vimala | 90-94 |

# தமிழிலக்கியங்களில் வணிகவியல் உத்திகள்

முனைவர்.பா.சரளாதேவி

உதவிப்பேராசிரியர், தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

புதுச்சேரி-605008. devysaraham@gmail.com

3

**முன்னுரை**

தமிழ் மொழி சொல் வளமும், பொருள் வளமும் கொண்ட மொழியாகும். புதிய புதிய துறைகளில், புதிய கருத்துக்கள் தமிழ்த்துறையில் நாளும் பெருகி வருகின்றன. புதிய துறைகளைக் கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் புதிய அகராதி வடிவங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இத்தகைய முறையில் வணிகவியல் துறை வளர்ந்துவரும் துறையாக உள்ளன. அறுபது எழுபது ஆண்டுகளாகத் தமிழில் கலைச் சொல்லாக்க முயற்சி நடந்து வருகிறது. இத்தகைய முறையில் பொருளியல், நிதியியல், வணிகவியல் துறைகளில் புதிய சொற்கள் தோன்றிக் கொண்டே உள்ளன. வணிகவியல் துறை வளர, புதிய சொற்கள் உத்திகளாக பயன்படுகின்றன. ஒரு வணிக நிறுவனத்தின் வரவு செலவுகளை நாட்குறிப்பேட்டில் எழுதுபவர் கணக்கர் என்றும், பட்டயக் கணக்கர், மேலான் கணக்கர் என்பது போன்ற பல பெயர்களில் வழங்கப்படுவர்.

**வணிகம்**

ஒரு பொருளை பிறரிடம் இருந்து வாங்குவதும், பிறகு விற்பதும் வணிகம் ஆகும். தனக்கு தேவையான எல்லா பொருளையும் தானே உற்பத்தி செய்யமுடியாது. தேவையான பொருளை பிறரிடமிருந்து வாங்குபவன், தன்னிடம் உள்ள சில பொருட்களை பிறருக்கு கொடுப்பான். வணிகர் என்று புதிய தொழில் செய்பவர்கள், பொருளை உற்பத்தி செய்பவர்களை குறிப்பிடுவர்.

**வணிகவகைகள்**

வணிகம் செய்பவர்களை பலவகையாக குறிப்பிட்டாலும் அவர்களை குறிப்பிடதக்க மூன்று வகையாக பிரிப்பர். (i) தனியார் வணிகம், (ii) கூட்டு வணிகம், (iii) அரசுதுறை வணிகம் என்று அழைப்பர்.

i. தனியார் வணிகம் - தனிநபரால் செய்யப்படுவது
ii. கூட்டு வணிகம் - இரண்டு மூன்று நபர்கள் சேர்ந்து செய்வது.
iii. அரசுதுறை வணிகம் - அரசாங்கத்தல் நடத்தப்படுவது.

**வணிக நெறிமுறைகள்**

வணிகம் பயன்டுத்தப்படுகின்ற முறையில் எற்படும் சிக்கல்களை ஆராய்வதற்கும், தீர்ப்பதற்க்கும் நெறிமுறைகள் அவசியமாகும். இத்தகைய நெறிமுறைகளின் மூலம் வணிகம் செய்யும் வகைகளை மூன்றுவகையாக பிரித்துள்ளனர். அவற்றில் சிலமுறைகள் அக்காலத்திற்கு மட்டுமின்றி இக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் அமைந்துள்ளன.

**சங்ககால தமிழர்களின் வாணிகம்**

தாலமி, பிளைனி முதலான யவன ஆசிரியர் அக்கால வணிக நிலையை தம்நூலில் எழுதியுள்ளனர். பழங்காலத்தவர் அக்காலத்து இடம், பொருள், சூழலுக்கு ஏற்ப தரை வாணிகத்தையும், கடல் வாணிகத்தையும் நடத்தினர். அவர்கள் கூட்டாக சார்ந்து "சாத்து" அழைத்து ரிய வாணிகத்தை நடத்தினார்கள். தரை வாணிகம் செய்தவர்களின் தலைவர் "மாசாத்துவர்" என்றும், கடல் வாணிகம்

சிறப்பிதழ்
**Special Issue**

***Chief Editor***
*Dr. M. Sadik Batcha*

***Advisory Editor***
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

23-24 புரட்டாசி 2052
9th & 10th October 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

இணையவழிப் பன்னாட்டு மாநாடு-2021

சிறப்பிதழ் : தமிழ்த்துறை,
ஸ்ரீ மத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி,
மயிலம்

# பன்முகப் பார்வையில் சிலப்பதிகாரம்

சிறப்பிதழ் ஆசிரியர்கள்

**Special Issues Editors**

**முனைவர் க. ஞானஜோதி சரவணன்**
பொதுச் செயலாளர்
கம்பன் கழகம் அறக்கட்டளை, திண்டிவனம்

**முனைவர் ச. திருநாவுக்கரசு**
முதல்வர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி

**முனைவர் அ. சதீஷ்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி

*Published by*

**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

**29**

மற்றொன்று

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)
(கலை & மனிதவியல்)

ஜனவரி - மார்ச்
ஏப்ரல் - ஜூன்
ஜூலை - செப்டம்பர்
அக்டோபர் - டிசம்பர்

Journal of

# CLASSICAL THAMIZH

*(A Quarterly International Multi latarал Thamizh Journal)*

January - March
April - June
July - September
October - December

ISSN:2321-0737

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்

தமிழ், கலை, அறிவியல் கல்லூரி, மயிலம்

கம்பன் கழகம் அறக்கட்டளை, திண்டிவனம், ஒருங்கிணைப்பில்

திண்டிவனம் தமிழ்ச் சங்கம், திண்டிவனம்

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், சென்னை

சிட்னி தமிழ் இலக்கியக் கலை மன்றம், ஆசுதிரேலியா

திருவள்ளுவர் உலகச் சாதனையாளர்கள் அமைப்பு, புதுச்சேரி

உலக சிலப்பதிகாரம் அறக்கட்டளை, ஆசுதிரேலியா

சிங்கப்பூர் தமிழ் இலக்கியக் களம், சிங்கப்பூர்

**KAMBAN BOOK OF WORLD RECORDS**

இணைந்து வழங்கும்

இணைய வழிப் பன்னாட்டு மாநாடு

# பன்முகப் பார்வையில் சிலப்பதிகாரம்

ISSN : 2321 - 984X


| | | |
|---|---|---|
| 1. முருகு. இளவழகன் | சிலம்பில் வள்ளுவம் | 1-6 |
| 2. மோ. யுவராஜ் | சிலப்பதிகாரமும் வேதாத்திரியமும் - ஓர் ஒப்பீடு | 7-12 |
| 3. தே.இந்திரகுமாரி | ஒப்பீட்டு நோக்கில் ஆய்ச்சியர் குரவையும் ஆழ்வார் பாசுரங்களும் | 13-16 |
| 4. கோ. பத்மவிலாசினி | உளவியல் நோக்கில் புறஞ்சேரி இறுத்த காதை | 17-22 |
| 5. சு. லட்சுமி | மாண்புமிகு மாதரி | 23-29 |
| 6. சீ. செஞ்சுலட்சுமி | கண்ணகியின் குணநலனும் மாதவியின் மன நலனும் | 30-37 |
| 7. ப. இராதா | புகாரில்லாப் புகார் | 38-43 |
| 8. செ.மேனகா | சிலப்பதிகாரத்தில் மனிதம் | 44-48 |
| 9. இரா. வசந்தகுமாரி | சிலப்பதிகாரம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் | 49-55 |
| 10. து.கனஜா தேவி | சிலப்பதிகாரத்தில் வள்ளுவச் சிந்தனைகள் | 56-61 |
| 11. கி. காயத்ரி | இசைக்கருவிகள் - சிலப்பதிகாரம் மற்றும் ஆற்றுப்படை நூல்களில் - ஓர் ஒப்பீடு | 62-69 |
| 12. ப.சுதா | சிலப்பதிகாரத்தில் அறம் | 70-73 |
| 13. து.சரஸ்வதி | சிலப்பதிகாரத்தில் முல்லைநில மக்கள் - ஓர் பண்பாட்டுப்பார்வை | 74-78 |
| 14. பொ.விஜயராணி | சிலப்பதிகாரத்தில் மதுரையின் மாண்புகள் | 79-82 |
| 15.ச.பாலசரஸ்வதி | சிலப்பதிகாரம் | 83-87 |
| 16. வே. லீலாவதி | சிலப்பதிகாரத்தில் அறிவியல் | 88-92 |
| 17. சு.நாகவள்ளி | சிலம்பும் பண்பாட்டின் பன்முக விளக்கமும் | 93-95 |
| 18. த. முத்துலட்சுமி | சிலம்பில் தொன்மங்கள்- சி. சு. செல்லப்பாவின் கனவின் எதிரொலி | 96-100 |
| 19. ச. திருநாவுக்கரசு | சிலப்பதிகாரத்தில் மெய்ப்பாடு | 101-106 |
| 20. க. இலட்சுமிதேவி | பூம்புகாரில் கண்ணகி | 107-111 |
| 21. நீ. காஞ்சனா | சிலப்பதிகாரத்தில் அணி நயம் | 112-117 |
| 22. கி. புஷ்பா | சிலப்பதிகாரத்தில் தொல்த் தமிழ்ச்சமூகம் | 118-122 |
| 23. ஞா.சுபஸ்ரீ | அடைக்கலக்காதையில் அறம் | 123-127 |
| 24. து. அமரதீபா | சிலப்பதிகாரத்தில் வாழ்த்து மரபு | 128-133 |
| 25. அ. சதீஷ் | சிலப்பதிகார யாப்பியல் : தொடை அமைப்புகள் | 134-140 |
| 26. பொன். ரமேஷ்குமார் | சிலம்பு போற்றும் வள்ளுவம் | 141-145 |
| 27. பெ. ராம்குமார் | சிலம்பு உணர்த்தும் வாழ்வியல் | 146-149 |
| 28. ந. அய்யனார் | சிலப்பதிகாரக் காதைகளில் காட்சிக் கலைகளின் சிறப்பியல்புகள் | 150-157 |
| 29. இரா. குமார் | உரையாசிரியர்களின் பார்வையில் சிலப்பதிகாரம் | 158-163 |
| 30. இரா. வள்ளி | சிலப்பதிகாரத்தில் குறிக்கோள் | 164-168 |
| 31. உ. சிவசுப்ரமணியன் | சிலப்பதிகாரச் சுவடுகள் | 169-173 |
| 32. ம.க.துர்காதேவி | உ.வே.சா வின் சிலப்பதிகாரப் பதிப்பு முகவுரையும் அவர்தம் ஆளுமையும் | 174-178 |
| 33. பா.சரளாதேவி | சிலப்பதிகாரக் கனவில் உளவியல் | 179-184 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# சிலப்பதிகாரக் கனவில் உளவியல்


**முனைவர் பா.சரளாதேவி**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தாகூர் அரசுக் கலை அறிவியல் கல்லூரி,
புதுச்சேரி-605 008.



**ஆய்வுச்சாரம்**

இந்த ஆய்வானது சிலப்பதிகாரக் காப்பியத்தில் காட்டப்படுகின்ற கனவுகளைப்பற்றியும் கனவுகளில் காட்டப்படுகின்ற உளவியல் சூழல்களைப்பற்றியும் விளக்குவனாக அமைந்துள்ளன. இக்காப்பியத்தில் கண்ணகி, கோவலன், கோப்பெருந்தேவி என்ற மூன்று கதைமாந்தர்கள் காணும் கனவினைப்பற்றியும் அவையெல்லாம் அவர்களின் உளவியலோடு எவ்விதம் தொடர்பு கொண்டுள்ளன என்றும் காட்டப்படுகின்றன. இந்தக் கட்டுரையில் சில காப்பிய உத்திகள் கையாளப்பட்டுள்ளன. வரும்முன் உரைத்தல், வரும்முன் காத்தல் போன்ற உத்திகள் கையாளப்பட்டுள்ளன. மருத்துவமுறை உளவியலும் காட்டப்படுகின்றன. ஃபிராயிடின் நியதியான ஃபிராயிடிசம் கனவுகளின் கூறுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளன.


**முன்னுரை**

நனவிலி உள்ளத்துள் பதுங்கியிருக்கும் சில உணர்வுகள் அல்லது ஆசைகள் வெறுப்புகள் அல்லது போராட்டங்கள் கனவின்மூலம் வெளிவருகின்றன. காப்பியங்கள் மக்களின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையன. குடிமக்கள்காப்பியமான சிலப்பதிகாரம் இக்கட்டுரையில் எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் வரும் பாத்திரங்களின் உள்ளங்களும் உளவியல் கோட்பாட்டின்படி ஆராயப்படுகின்றன.

**கருத்துரை**

ஒரு நாட்டின் மொழியை, இலக்கிய இலக்கணத்தை, வாழ்வின் சிறப்பை அந்நாட்டின் இலக்கியங்களே உணர்த்தும். அப்படிப்பட்ட இலக்கியங்களில் தலைசிறந்ததாக இருப்பது சிலப்பதிகாரம் ஆகும். கதையில் மட்டுமின்றி சிலப்பதிகாரம் காலச்சுவடுகளுக்கான வரலாறாகவும் ஒளிர்கின்றன. சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கோவலன், கோப்பெருந்தேவி முதலியோர் கனவுகள் காண்பதாகச்சிலம்பு காட்டுகின்றது. இவர்கள் காணும் கனவுகள் உளவியல் நோக்கில் இக்கட்டுரை ஆராய்கிறது.

**கனவுபற்றி அறிஞர்களின் கருத்து**

1. மனதில் உள்ள உணர்வுகள் குறியீடுகள்மூலம் கனவுகளாக வெளிப்படுகின்றன - அரிஸ்டாடில்.

2. நிறைவேறாத ஆசைகளின் சுய திருப்திகளே கனவுளு சந்திக்கின்ற அல்லது விரும்புகின்ற ஆசைகள் அல்லது கற்பனைகள் இயலாமை காரணமாக, சமூகக்கதைகள் காரணமாகவோ நிகழ முடியவில்லை. அவை அடிமனதில் சென்று படிகின்றன. தூங்கும்பொழுது. நனவிலி மனம் விகாரத்தோடும் வினோதங்களுடனும் கனவுகளாக வெளிவருகின்றன - ஃபிராயிடு

3. கனவு என்பது கடந்த காலத்தில் நிகழ்ந்த, தற்காலத்தில் நிகழ்கின்ற, வருங்காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை சில குறியீடுகளின் வாயிலாக வெளிப்படுத்துகிறது - கிரேக்க அறிஞர்கள்.

4. கனவு காண்பவரின் ஆளுமைப்பண்பை விளக்குகிறது - மணிவேலன்.

# தமிழர் மாண்பு

**தேசிய ஆய்வுக் கருத்தரங்கக் கட்டுரைகள்**

**நூல் தொகுப்பு**
பாவலர் ஆறு.செல்வன்

**பதிப்பாசிரியர்**
முனைவர் ஆ.விஜயராணி

**துணைப்பதிப்பாசிரியர்கள்**
பேராசிரியர் க.கிருஷ்ணம்மாள்
முனைவர் அண்ணா.ஜெகன்

**வெளியீடு**

**புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம்**
எண் 4, காமராசர் தெரு, வி.பி. சிங் நகர்,
சண்முகாபுரம், புதுச்சேரி - 605 009

# நூற்குறிப்பு


- நூல் : தமிழர் மாண்பு
- மொழி : தமிழ்
- வகை : கட்டுரை
- நூல் தொகுப்பு : பாவலர் ஆறு.செல்வன் 9894755985
- பதிப்பாசிரியர் : முனைவர் ஆ.விஜயராணி
- துணைப்பதிப்பாசிரியர்கள் : பேராசிரியர் க.கிருஷ்ணம்மாள்<br>முனைவர் அண்ணா. ஜெகன்
- முதல் பதிப்பு : 25.09. 2022
- வெளியீடு : புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம்
- உரிமை : வெளியீட்டாளருக்கு
- நூலின்அளவு : 1/8 demi
- பக்கம் : 318
- தாள் : மேப்லித்தோ N.S. - 70 G.S.M.
- மேல் அட்டை : பல்வண்ண அட்டை - 300 G.S.M.
- மேல்அட்டை வடிவமைப்பு : ஜெயக்குமார்
- நூல் வடிவமைப்பு : க.சரவணன்

அச்சாக்கம் : யோகி பதிப்பகம்.<br>65.,4வது குறுக்குத்தெரு, சக்திநகர்<br>புதுச்சேரி -13 பேசி : 99947 25888

- ISBN No. : 978-81-954810-3-3
- விலை : உருபாய் 500/-

15. இல்லறத்தில் தமிழனின் மாண்பு
பாவலர். கோ.கலியபெருமாள்
16. சங்க இலக்கியங்களில் தமிழரின் இல்லற
மாண்புகள் முனைவர் நா.காயத்ரி
17. கட்டடக் கலையில் தமிழனின் தொன்மை
பாவலர் வெ. கிருட்டினக்குமார்
18. பெண்புலவர்களின் வீரம்
பேராசிரியர் க.கிருஷ்ணம்மாள்
19. முல்லைத்திணையில் தமிழ்ர் தொன்மைகள்
முனைவர் கோ. குணசேகர்
20. சாமி. சிதம்பரனார் வாழ்வும் தமிழ்ப் பணியும்
முனைவர் இரா. கோவலன்
21. அறிஞர்அண்ணாவின் பொங்கல் திருநாளில் தமிழர்
வாழ்வு - முனைவர் மு.கோவிந்தராசன்
22. திருமுருகாற்றுப்படையில் வழிபாடும்
நம்பிக்கைகளும் - ஆ. சந்திரகலா
23. முதுமொழிக் காஞ்சியில் மேலாண்மைச்
சிந்தனைகள் பாவலர் சுந்தர. சந்திரகுமரன்
24. நற்றிணைக் கூறும் தமிழரின் நம்பிக்கை - ஓர் ஆய்வு
முனைவர் வி. சரளா ஆறுமுகம்
25. இலக்கியங்களில் தமிழனின் தொன்மைச் சிறப்பு
முனைவர். பா.சரளாதேவி
26. திருக்குறல் வழியில் அறத்தில் தமிழர் மாண்பு
பாவலர் க.சரவணன்
27. ஐங்குறுநூற்றில் தமிழனின் தொன்மை
ஆய்வாளர் செ.சுரேஷ்குமார்
28. அறிவியலில் தமிழரின் தொன்மை - ஓர் ஆய்வு
தகடூர் தமிழ்க்கதிர்
29. பழந்தமிழ் இலக்கியத்தில் அறிவியல்
கோட்பாட்டுச் சிந்தனைகள்

# இலக்கியங்களில் தமிழனின் தொன்மைச் சிறப்பு

முனைவர் பா.சரளாதேவி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
புதுச்சேரி-8.



## முன்னுரை

தமிழர்கள்,

**"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே**
**முன்தோன்றி மூத்த குடியினர்"**

என்று போற்றக்கூடிய சிறப்பு உடையவர்கள் இன்று தமிழ் செம்மொழியாக விளங்குவதற்குக் காரணம் தமிழரின் தொன்மை, தமிழின் தொன்மை எனலாம். வரலாற்று ஆசிரியர் பலரும் கிறித்துவ மொழி தொடங்குவதற்கு முன்பே மதுரையில் தமிழ்ச்சங்கம் இருந்திருக்க வேண்டும் என்கின்றனர். உலகில் பழமைவாய்ந்த மொழிகளாகக் கருதப்படும் வடமொழி, சீனம், ஹீப்ரு, இலத்தின், கிரேக்கம் ஆகியவற்றோடு வைத்து எண்ணப்படுவது தமிழ்மொழியாகும். இந்தியாவில் மரபுச் செய்திகள் தமிழைத் தவிர வேறு எங்கும் இல்லை என்ற தனிநாயக அடிகளின் கூற்று, தமிழின் சிறப்பை விளக்குவதாக உள்ளன. திராவிட மொழிகளுள் மிகவும் தொன்மையான பண்பட்ட மொழி தமிழ் மொழி என்று "கால்டுவெல்" குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய சிறப்பான தமிழ் மொழியை, தமிழனின் தொன்மை சிறப்புகளை, இக்கட்டுரையில் ஆராய முற்படுகின்றது.

**"வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்**
**தமிழ் கூறும் நல்லுலகத்து"**

என வடவேங்கடமாகிய மலையும் தென்குமரி ஆற்றிற்கும் இடைப்பட்ட பகுதி தமிழ்நாடு வழங்கும் நல்லுலகமாகும். "ஐந்திரம்" என்னும் தனக்கு முன் தோன்றிய இலக்கண நூலறிவு பெற்ற தொல்காப்பியன் "தொலக்காப்பியம்" என்று இலக்கண நூலை யாத்துத் தமிழ்மொழியைக் காலத்தின் முன்நோக்கிச் செல்ல வழிவகுத்துள்ளார்.

# தமிழிலக்கியங்களில்...
# உணர்வெழுச்சி

**பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை**

**தொகுதி-2**

பதிப்பாசிரியர்

**"சொல்லின் செல்வர்" "கலைமாமணி"**

**ஆவடிக்குமார்**

நிறுவனர், தமிழ்த்திறன் ஆய்வு நடுவம்
தலைவர், அனைத்திந்திய தமிழ்ச்சங்கம்
சென்னை-600 071

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தமிழிலக்கியங்களில்... உணர்வெழுச்சி பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை |
| பதிப்பாசிரியர் | : | "சொல்லின் செல்வர்" "கலைமாமணி" ஆவடிக்குமார் |
| வெளியீடு | : | கழகமுரசு பதிப்பகம்<br>எண்.71, ஒன்பதாவது தெரு<br>காமராஜ் நகர், ஆவடி,<br>சென்னை - 600 071.<br>போன்: 9941274777 |
| முதற்பதிப்பு | : | மே 2021<br>தொகுப்பு - 2 |
| நூல் அளவு | : | கிரவுன் 1/4 |
| பக்கங்கள் | : | 548 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | ரூ. 600/- |
| அச்சாக்கம் | : | ஆவடிக்குமார் அச்சகம்<br>சென்னை - 600 071. |
| ISBN No. | : | 978-81-908685-3-2 |

43. பர்த்திருஹரியின் நீதிசதகமும், வள்ளுவரின் அறத்துப்பாலும் ஓர் ஒப்பியல் ஆய்வு - **சிறிகலா ஜெகநாதன்** 223
44. நன்னூலில் வாழ்வியல் சிறப்புகள் **முனைவர். வெ. ஜெயந்தி** 229
45. காரைக்கால் அம்மையார் புராணம் வழி வெளிப்படும் பெண்ணிய உணர்வுகள்-**பெ. பவுன்துரைச்சி** 235
46. புறநானூறு அழுகையுணர்ச்சி **முனைவர் நா. தனலட்சுமி** 239
47. சிவவாக்கியர் சிந்தனைகள் **முனைவர் பா. சரளாதேவி** 242
48. சிலப்பதிகாரம் கூறும் கண்ணகியின் உணர்ச்சிகள் **ச.சக்தி** 248
49. குறுந்தொகையில் அன்பின் நிலைப்பாடு **முனைவர் வே.மாணிக்கம்மாள் பிச்சை** 251
50. பாமாவின் கருக்கு நாவலில் ஒடுக்கப்பட்டோர் வாழ்வியல் **க. சங்கர்** 257
51. அசைவறு மதியும் ஆசைப் பெருக்கும் **பாவலர் தவ சஜிதரன்** 262
52. குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பாவின் சிறுவர் பாடல்களில் உணர்வெழுச்சி **தெ. மோகனாம்பாள்** 266
53. கொடை மனம் வேண்டும் **மைசூர் இரா.கர்ணன்** 272
54. பொன்முடியார் கவிதைக் கலையும் உணர்ச்சியும்... **முனைவர் வே.ஸ்ரீலதா** 275
55. பத்துப்பாட்டில் தமிழக அரசர்களின் வீரத்திறமை **நல்லாசிரியர் மாமணி செ. முருகசரஸ்வதி** 280
56. சைவ வைணவ சித்தாந்த சாத்திரங்களில் உணர்வெழுச்சிக் கூறுகள் **பெரும்புலவர் செம்மங்குடி துரையரச தொண்டைமான்** 285
57. இலக்கியங்களில் உணர்வெழுச்சி **ரேவதி ராதாகிருஷ்ணன்** 292
58. வண்ணதாசனின் 'நிரப்புதல்' சிறுகதையில் பெண் பாத்திரங்களின் மன உணர்வு **சி.நந்தினி** 298
59. நாட்டுப்புறப் பாடல்களில் தாலாட்டு **அ.டெய்சி** 302
60. சித்தர்களின் பன்முகப்பார்வை (அல்லது) தமிழ் வளர்ச்சியில் சித்தர்களின் பங்கு -**முனைவர். டா. எமிலியா தெரஸ்** 308
61. மறைந்த இலெமூரியா **முனைவர் இல. மாலினி** 312
62. புறம் காட்டும் உணர்வெழுச்சி நிலைப்பாட்டில் புலவரும் புரவலரும் **முனைவர் க.விஜயராகவன்** 316
63. குறுந்தொகையில் காதல் உணர்வு **முனைவர் மு. கோவிந்தராசன்** 322
64. கைந்நிலை காட்டும் மருதத்திணைப்பாடல்களின் உணர்வெழுச்சி **முனைவர் சி.மரியசெல்வம் லேக்கதோஸ்** 326

# சிவவாக்கியர் சிந்தனைகள்

**முனைவர் பா. சரளாதேவி**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**
**தாகூர் அரசுக் கலைஅறிவியல் கல்லூரி**
**புதுச்சேரி 605008**



கடவுள் வழிபாட்டில் புரட்சியைச் செய்தசித்தர்கள் வாழ்ந்தகாலம் 16ம் நூற்றாண்டு முதல் 18ம் நூற்றாண்டு வரை குறிப்பிடுவர். சித்துவிளையாட்டில் சிறந்த சித்தர்கள் அறிவால், யோகத்தால், ஞானத்தால் பல துறைகளில் சிறந்து விளங்கினார்கள். தாம் சிறந்து விளங்கிய துறையின் பயன்களையெல்லாம் மக்களைச் சென்றடையப் பலமுயற்சிகளை, சித்தர்கள் செய்தனர். கடவுளின் ஒளியை மனிதன் உள்ஒளியாகக் கண்டுவந்த சித்தர்களில் குறிப்பிடத்தக்கவராக, சிவவாக்கியர் விளங்கினார்.

**சிவவாக்கியர்**

சித்தர்களில் மிகுதியான பாடல்களைப் பாடிய சித்தராக, சிவவாக்கியர் குறிப்பிடப்படுகிறார். சிவாயமே என்ற தொடரைத் தம் பாடலின் இறுதிசீராகப் பலபாடல்களில் அமைத்துள்ளார். தோஷங்கள், பாவங்கள், மாயைகள் என்பனவெல்லாம் ஓடிப்போக, சிவத்தைக் குறிப்பிடும் சிவவாக்கியம் என்னும் மந்திரத்தின் சிறப்பைச் சொல்வதால் சிவவாக்கியராகக் கருதப்பட்டார்.

**மந்திரங்கள்**

மந்திரங்கள் மனிதர்களை வழிநடத்தும் கருவியாக விளங்குகின்றன என்றும் ஐந்து எழுத்து மந்திரமும் எட்டு எழுத்து மந்திரமும் பிரபஞ்சத்தையே இயக்குவதாகக் குறிப்பிட்டு, அவற்றின் சிறப்புகளைத் தம் பாடல்களின் வழிவிளக்குகிறார்.

பிரபஞ்சம் ஐந்தெழுத்து மந்திரமாகிய நமசிவாயத்திலேயே தோன்றியதுஎன்றும், நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் என்ற பஞ்சபூதங்களால் மனித உடலும் மற்ற பொருள்களும் தோன்றுகின்றன என்றும், சிவாயநம என்னும் பஞ்சாட்சரம் சொல்லும் பொழுது, சித்தம், சிந்தை, உயிர் என மூன்றும் இயக்கமற்று விளங்கும் என்கிறார். மூல மந்திரம், மூலப் பிருகிருதியும், முக்திஎண்ணமும் வராது உடம்பில் சக்தியாகவும் சிவமாகவும் உள்ள உணர்வுகள் மாறிவிடும் என்று மந்திரத்தின் மகிமையைக் கூறுகிறார்.

### தமிழ் வளர்ச்சியில்

# புலவரும் புரவலரும்

தொகுப்பு :

முனைவர் **கலை.இராம. வெங்கடேசன்**

முனைவர் **ஜெ. இராதாகிருஷ்ணன்**

முனைவர் **க. ஞானஜோதி சரவணன்**

**சங்கரா பதிப்பகம்**

ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)

ஏனாத்தூர், காஞ்சிபுரம் - 631 561, 044 - 27264066

நூல் : தமிழ் வளர்ச்சியில் புலவரும் புரவலரும்
முதற்பதிப்பு : மே, 2023
தொகுப்பு : முனைவர் கலை.இராம. வெங்கடேசன்
முனைவர் ஜெ. இராதாகிருஷ்ணன்
முனைவர் க. ஞானஜோதி சரவணன்

நூல் மற்றும்
அட்டை வடிவமைப்பு : காயத்திரி கிராபிக்ஸ், சென்னை
ஒளி அச்சு : டுடே கிராபிக்ஸ், சென்னை
அச்சகம் : பாரதி பிரிண்டர்ஸ், சென்னை
பக்கங்கள் : 184
ISBN NO : 978-81-939345-9-3
விலை : ரூ. 140

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின்
அருளாணையின்படி, காஞ்சிபுரம், ஏனாத்தூர், ஸ்ரீ சங்கரா கலை மற்றும்
அறிவியல் கல்லூரியும் திண்டிவனம், கம்பன் கழக அறக்கட்டளையும்
இணைந்து காஞ்சிபுரத்தில் தமிழ் வளர்ச்சியில் புலவரும் புரவலரும் என்ற
மையப்பொருண்மையில் 20.05.2023 மற்றும் 21.05.2023 ஆகிய
இரு நாட்களில் நடத்திய மாநாட்டில் வாசிக்கப்பெற்ற
ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு இது.

**சங்கரா பதிப்பகம்**
ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
ஏனாத்தூர், காஞ்சிபுரம் - 631 561, 044 - 27264066

# பொருளடக்கம்


1. நின்னொடு ஐவராளோம் – **முனைவர் ந. அப்பாதுரை** 5

2. புறநானூற்றில் காணப்படும் அதியமானின் சிறப்பம்சங்கள் – **தி. அமர்ராஜ்** 10

3. வள்ளுவம் காட்டும் அறம் – **முனைவர் ச. அய்யர்** 15

4. நற்றிணையில் நெய்தல் நில உணவுப் பொருட்கள் – **ர. அன்பழகி** 19

5. கம்பனின் உவமைகள்: வார்த்தை விளையாட்டு –**எம். இளவழகன்** 25

6. புலம் பெயர் இலக்கியங்களில் தமிழர் வாழ்வியல் **முனைவர் கே. கண்ணாத்தாள்** 32

7. நம்மாழ்வார் பாசுரங்களில் சமுதாய சிந்தனைகள் **முனைவர் கே. இரா. கமலாமுருகன்** 38

8. திருக்குறள் காட்டும் வாழ்வியல் கூறுகள் – **முனைவர். செ.காஞ்சனா** 43

9. கம்பனும் கண்ணதாசனும் – **ந.காருண்யா** 47

10. திருச்சிற்றம்பலம் திருமந்திரம் – **அறநெறித் தமிழ்ச்செல்வர் ச. குமரவேல்** 52

11. விருந்தின் சிறப்பு – **கு. சசிகலா** 57

12. தங்கப்பாவின் "பாட்டு வாழ்க்கை" – **முனைவர். பா.சரளாதேவி** 63

13. நாயகனும் நம்பியாரூராரும் – **முனைவர். பா.சரளாதேவி** 67

14. தமிழ் இலக்கியங்கள் கூறும் பரத்தமை – **ஜோ. சாந்தமூர்த்தி** 73

15. "தமிழ் வளர்ச்சியில் கணைக்கால் இரும்பொறையும், பொய்கையாரும்" – **முனைவர் சு.சிவகாமசுந்தரி** 80

16. திருமூலரின் அட்டாங்க யோகம் – **முனைவர். பா.சீனிவாசன்** 86

# தங்கப்பாவின் "பாட்டு வாழ்க்கை"

**முனைவர். பா.சரளாதேவி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி - 605008.

தனித்தமிழ் உணர்வு மிக்கவராக, தமிழறிஞராக, தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய தங்கப்பா கவிதை, கட்டுரை, மொழிப்பெயர்ப்பு, என பல்துறை வித்தகராக விளங்கினார். மொழிப்பெயர்ப்பு நூலுக்காகவும், குழந்தை இலக்கிய நூலுக்காகவும் 'சாகித்திய அகடாமி விருதினை' இரண்டு முறைப் பெற்றவர். வாழ்நாள் சாதனையாளராகவும், தமிழும், ஆங்கிலமும் ஒருங்கே கைவரப்பெற்றவராக விளங்கினார். 'தோன்றின் புகழோடுத் தோன்றுக' என்பதற்கு ஏற்ப 'குறும்பலாப்பேரியில்' தோன்றி இலக்கிய புகழ்பெற்று 2018–ல் தன் உடலை புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு கொடையாக கொடுத்து மறைந்தார். புதுவையில் சுற்றுச்சூழல் பாதுகாவலராக விளங்கினார். பகுத்தறிவு பார்வையுடன் தமிழ்த் தேசியப் போராளியாகத் திகழ்ந்தார். குழந்தை உள்ளத்துடன் தன்னைச் சுற்றி நடப்பவைகளைக் கட்டுரைகளில் பதிவு செய்துள்ளார்.

உளவியல் நெருக்கடிக்குள் சிக்கி மனிதனின் அவலமான நுகர்வுப் பண்பாட்டில் அடங்கியுள்ளதை உணர்ந்த தங்கப்பா மனித மனங்களில் அடர்த்தியாய் அடைத்துக் கொண்டு கிடக்கும் செயற்கைக் கூறுகளை விட்டு விலகி, வாழ்வின் பொருள் உணர்ந்து விழாப்போல வாழ்க்கையை பக்குவமாக அமைத்துக்கொள்கிறார். எது நடந்தாலும் அதை கூட்டிக் குறைக்காமல் அந்தந்த அளவில் அவைகளை ஏற்றுக்கொள்கிறார்.

'பாட்டு வாழ்க்கை' என்ற இந்த கட்டுரையில் குழந்தை உலகம், பாட்டுவாழ்க்கை, பாட்டு – உரைநடை, வாழ்க்கை என்ற தலைப்புகளின் கீழ் அவரின் நடைவளம்,

கருத்தாக்கங்கள் சொல்லாடல்கள், எண்ணங்கள், சொல்கோர்வைகள் போன்ற கூறுகளின் வழி காணலாம்.

**குழந்தை உலகம்:**

தங்கப்பா அவர்கள் குழந்தை – பெரியவர்கள் என்ற இரு அணியிலிருந்தும் சிந்தனை செய்து இக்கட்டுரையை எழுதியுள்ளார். ஒரு குழந்தை உலகத்தை கூறும்போது குழந்தைகளுக்கு சீப்பும், கண்ணாடியும், முகமாவும் (பவுடர்), சாந்துப்பொட்டும் பிடித்தப் பொருளாகவும், அவற்றைக் கொண்டு தன் விருப்பம் போல் தன்னை அழகாக்கிகொள்கிறேன் என்று கரும்புள்ளி செம்புள்ளி முகம் முழுவதும் குத்திக் கொள்ளும் என்று காட்டுவதிலிருந்து குழந்தைகளின் செயல்களை எந்த அளவு கவனித்து ரசித்து இருக்கிறார் என்ற உண்மை புலப்படுகிறது. குழந்தை செய்துக் கொள்ளும் ஒப்பனை கள்ளமற்ற மகிழ்ச்சியிலிருந்து இயற்கையான உள்ளத்திலிருந்து பிறக்கும் செயல்களாகும் என்பதன் மூலம் அவரின் குழந்தை உள்ளம் வெளிப்படுகிறது.

குழந்தைகளுக்கு கற்பனை உலகம் உண்டு. நடக்குமா – நடக்காதா என்றெல்லாம் குழந்தைகள் கவலைப்படாமல் ஒவ்வொரு நொடியிலும் வாழ்வில் ஈடுபடுவர். ஒவ்வொன்றையும் புதியதாக பார்ப்பார். புழுவைக் கண்டுகூட மகிழ்ச்சி அடைவார்கள். எது மகிழ்ச்சி தருமோ அதுதான் அவர்களுக்கு உண்மையான வாழ்க்கையாக கருதுவார்கள். குழந்தைகள் பாட்டுக்கு பொருந்தாத கற்பனையாக இருந்தாலும் உலகியல் கணக்குப் பார்த்து தங்கள் மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொள்வதில்லை என்கிறார். குழந்தைகளின் உலகத்தில் பெரியவர்கள் நுழைய முடியாதபடி வேலையும் படிப்பும் கெடுப்பதாக சுட்டிக்காட்டுகிறார். இன்றைய உலகினில் இருக்கும் பெரியவர்களின் யதார்த்தத்தையும் அவர்கள் குழந்தைகளின் மீது ஏற்படுத்தும் அழுத்தத்தையும் இக்கட்டுரையில் ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

**பாட்டு வாழ்க்கை:**

பலரின் வாழ்க்கை பழக்கவழக்கங்களுக்கு உட்பட்டு வெறும் வரட்டுத்தனமான வாழ்க்கையாக உள்ளது. இது வெறும் உலகியலாக நின்றுவிடுகிறது. தேவைகளை நிரப்பிக் கொள்ளத்தான் உலகியல் வாழ்க்கை பயன்படுகிறது. தேவைக்காக வாழ்வது உண்மை வாழ்க்கை அல்ல. அதற்கு அப்பால் உள்ளத்தில் உள்ள, உணர்வில் இனிக்கக்கூடிய அன்பு வாழ்க்கையே 'பாட்டுவாழ்க்கை' என்று விளக்கம் தருகிறார்.

பிஞ்சு உள்ளங்களின் மூளையில் பாடங்கள் பெரியவர்களால் வருங்கால வளர்ச்சிகாக இன்றைய காலகட்டத்தில் திணக்கப்படுகின்றன. குழந்தைகளின் உள்ளத்தின் நலத்தை புறக்கணித்து வருங்கால வளர்ச்சிகள் என்ற போர்வையில் குழந்தைகள் மீது திணிக்கப்படுகின்றன. குழந்தைகளுக்கு சிரிப்பும் விளையாட்டும் இல்லாத இயற்கை வாழ்க்கைக்கு எதிரான வறண்டு சுவையில்லாத செயற்கை வாழ்க்கையை வாழ வலியுறுத்துகிறோம். அழகான ஆடைகள், விலையுயர்ந்த நகைகள், பகட்டு நாகரீகப் பொருள்கள் என இயற்கை இல்லாத செயற்கை கூறுகளில் வாழ்க்கையை சுவையாக்க வாங்கி குவித்து வாழ்க்கையை சுமையாக்கி கொள்கிறோம் என்று மகிழ்ச்சியான இயற்கை வாழ்வை மறந்து பொருளை தேடுவதிலும்,

# உலகத் தமிழர்களின் வரலாறும் வாழ்வியலும்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கக் கட்டுரைகள்)

முதன்மைப் பதிப்பாசிரியர்கள்
முனைவர் பொன்.கதிரேசன்
முனைவர் கோ. விசயராகவன்

பதிப்பாசிரியர் குழு
முனைவர் சி. சந்திரசேகர்
முனைவர் தெ. வெற்றிச்செல்வன்
முனைவர் த. ஜான்சிராணி
முனைவர் ஜெ. புவனேஸ்வரி
முனைவர் மு.சித்ராதேவி
ஆசிரியர் அ.சரவணன்

**உலகத் தமிழர் நாள் விழா - 2022 - ஜனவரி - 12**
**அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறை ஆணையரகம், சென்னை.**
**பன்னாட்டுத் தமிழ் பதிப்பகம் வெளியீடு, நூல் தொகுதி - 1**

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | உலகத் தமிழர்கள் வரலாறும் வாழ்வியலும் (தொகுதி-1) ULAKA TAMIZHARKALIN VARALAARUM VAAZHVIYALUM |
| முதன்மை பதிப்பாசிரியர்கள்: | | முனைவர் பொன்.கதிரேசன் முனைவர் கோ.விசயராகவன் |
| FIRST PUBLISHERS | : | DR PON. KATHIRESAN DR G.VIJAYARAGAVAN |
| பதிப்பாசிரியர் குழு | : | முனைவர் சி. சந்திரசேகர் முனைவர் தெ. வெற்றிச்செல்வன் முனைவர் த. ஜான்சிராணி முனைவர் ஜெ. புவனேஸ்வரி முனைவர் மு.சித்ராதேவி ஆசிரியர் அ.சரவணன் |
| மொழி | : | தமிழ் |
| முதற்பதிப்பு | : | 2022 ஜனவரி |
| தாள் அளவு | : | 1x8 டெம்மி |
| Pages | : | XXXVIII+384=422 |
| விலை | : | ரூ.500/- |
| ISBN | : | **978-81-955012-7-4** |
| பதிப்பகம் | : | வாகை பதிப்பகம், விருதுநகர் - 626 131. |
| Publication | : | VAHAI PUBLICATION 1/120, Ethirkottai, Sivakasi - 626131 |
| நூல் வடிவமைப்பு | : | பி.கி.இராம்குமார் |
| அச்சாக்கம் | | ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், மதுரை - 625 020. |



உரிமை - வெளியீடு



பன்னாட்டுத் தமிழ் ஆளுமையர்கள் கூட்டமைப்பு,

115, நாமகிரிப்பேட்டை அஞ்சல் - 637 406

இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

தமிழ்நாடு, இந்தியா, பன்னாடு

அலைபேசி எண்: 9360507675

**Email:** pannattutamizh2022@gmail.com

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தாய்லாந்தில் தமிழ்ப் பண்பாடு<br>- முனைவர் ஆ. விஜயராணி | 1 |
| 2. | வெளிநாட்டில் வாழும் தமிழர் பண்பாடு<br>- முனைவர் கி. சக்திப்ரியா | 11 |
| 3. | அயல்நாட்டு வணிகத்தில் தமிழர் மாண்பு<br>- முனைவர் சி.பானுமதி | 18 |
| 4. | சங்க இலக்கியத்தில் வாணிகத் தொடர்புகள்<br>- திருமதி மு. பழனியம்மாள் | 24 |
| 5. | சிங்கப்பூர் கவிமாலையும் தமிழ் வளர்ச்சியும்<br>- முனைவர் க.ரேகாராஜா | 31 |
| 6. | வெளிநாட்டில் தமிழர்களின் வரலாறு<br>- முனைவர் வெ.ஜெயந்தி | 40 |
| 7. | துரைச்செல்வியின் எனக்கென்றிருந்த இடங்களில் நூல் பகரும் புலம்பெயர்ந்தோர் சுவடுகள்<br>- முனைவர் பொன். திலகவதி | 46 |
| 8. | சாவகத் தீவும் தமிழ்ப் பண்பாடும்<br>- முனைவர் க. கண்ணன் | 54 |
| 9. | வெளிநாட்டில் தமிழர் பண்பாடு<br>- பழ.கலைவாணி பாண்டியன் | 62 |
| 10. | பண்பெனப்படுவ...<br>- முனைவர் மு.சுதா | 67 |
| 11. | பர்மாவில் தமிழ்ப் பண்பாடு<br>- முனைவர் கா.ராஜகுமாரி | 74 |
| 12. | பிரான்சு வாழ் தமிழர்களும், அவர்களின் தமிழுணர்வும்!<br>- முனைவர், பாவலர் அருணா செல்வம் | 79 |
| 13. | இணையத்தில் இதழ்கள்<br>- முனைவர் மு. கோவிந்தராசன் | 86 |
| 14. | அம்பை நாவல்களில் பெண்ணியம்<br>- வீ.இராஜேந்திரன் | 91 |
| 15. | பதிற்றுப்பத்தில் வரலாற்று செய்திகள்<br>- முனைவர் பா. சரளாதேவி | 97 |

# பதிற்றுப்பத்தில் வரலாற்று செய்திகள்

முனைவர் பா. சரளாதேவி
உதவிப் பேராசிரியர்
தாகூர் அரசு கலைஅறிவியல் கல்லூரி
புதுச்சேரி - 605008.

எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து சேர மன்னர்களின் சிறப்பினை பதிகம் வாயிலாகவும், பாடல்கள் வாயிலாகவும் வெளிப்படுத்துகின்றன. முதலும் இறுதியும் தவிர கிடைக்கும் எட்டு பத்துக்களிலும் பாடலைப் பாடினோர் பாடப் பட்டோர் பாடிப் பெற்ற பரிசில் பாடப்பட்ட அரசனின் ஆட்சிக் காலம் வாணிகத் தொடர்புகள் போன்ற செய்திகளைப் பதிகமானது வெளிப்படுத்துகின்றது.

**பாடல்களும் பதிகமும்**

பதிற்றுப்பத்து பாடல்கள் ஒவ்வொன்றும் அப்பாட்டினுள் காணப்படும் சொல்தொடர் ஒன்றினால் பெயர் பெற்றுள்ளன.

- ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் அப்பாடலுக்குரிய துறை,வண்ணம், தூக்கு, பெயர் முதலியவை பாடல்களைத் தொகுத்தவரால் அமைக்கப் பட்டுள்ளன.
- அனைத்துப் பாடல்களும் சேர வேந்தர்களின் கல்வி மேம்பாடு, புகழ், விருப்பம், ஆட்சித் திறன், பொருள் செயல்வகை, நிகழ்த்திய கடற்போர்கள் நாகரீக நிலைமை, மக்கள்வழித்தாயமுறை போன்றவற்றை விளக்குவனவாக அமைந்துள்ளன.
- ஆசிரியப்பாவில் அமைந்துள்ள நூறு பாடல்களும் பாடாண் திணையில் பாடப் பட்டுள்ளன.
- கபிலர், பரணர் போன்ற கடைச்சங்கப் புலவர்களின் பாடல்கள் பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ளதால் கடைச்சங்க கால நூலாகக் கருதப் படுகின்றன.
- திணை, துறை, வண்ணம், தூக்கு முதலிய குறிப்புகள், பாடல்கள் பொருள்யாப்பு வகையில் வரையறை செய்து காட்டப்பட்டுள்ள சிறப்பினை உணர்த்துகின்றன.

தமிழ் வளர்ச்சியில்

# புலவரும் புரவலரும்


தொகுப்பு :

முனைவர் **கலை.இராம. வெங்கடேசன்**

முனைவர் **ஜெ. இராதாகிருஷ்ணன்**

முனைவர் **க. ஞானஜோதி சரவணன்**



**சங்கரா பதிப்பகம்**

ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)

ஏனாத்தூர், காஞ்சிபுரம் - 631 561, 044 - 27264066

நூல் : தமிழ் வளர்ச்சியில் புலவரும் புரவலரும்

முதற்பதிப்பு : மே, 2023

தொகுப்பு : முனைவர் கலை.இராம. வெங்கடேசன்
முனைவர் ஜெ. இராதாகிருஷ்ணன்
முனைவர் க. ஞானஜோதி சரவணன்

நூல் மற்றும்
அட்டை வடிவமைப்பு : காயத்திரி கிராபிக்ஸ், சென்னை

ஒளி அச்சு : டுடே கிராபிக்ஸ், சென்னை

அச்சகம் : பாரதி பிரிண்டர்ஸ், சென்னை

பக்கங்கள் : 184

ISBN No : 978-81-939345-9-3

விலை : ரூ. 140

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின்
அருளாணையின்படி, காஞ்சிபுரம், ஏனாத்தூர், ஸ்ரீ சங்கரா கலை மற்றும்
அறிவியல் கல்லூரியும் திண்டிவனம், கம்பன் கழக அறக்கட்டளையும்
இணைந்து காஞ்சிபுரத்தில் தமிழ் வளர்ச்சியில் புலவரும் புரவலரும் என்ற
மையப்பொருண்மையில் 20.05.2023 மற்றும் 21.05.2023 ஆகிய
இரு நாட்களில் நடத்திய மாநாட்டில் வாசிக்கப்பெற்ற
ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு இது.

SP Sankara Publications

**சங்கரா பதிப்பகம்**

ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
ஏனாத்தூர், காஞ்சிபுரம் - 631 561, 044 - 27264066

# பொருளடக்கம்


1. நின்னொடு ஐவரானோம் – **முனைவர் ந. அப்பாதுரை** 5

2. புறநானூற்றில் காணப்படும் அதியமானின் சிறப்பம்சங்கள் – **தி. அமர்ராஜ்** 10

3. வள்ளுவம் காட்டும் அறம் – **முனைவர் ச. அய்யர்** 15

4. நற்றிணையில் நெய்தல் நில உணவுப் பொருட்கள் – **ர. அன்பழகி** 19

5. கம்பனின் உவமைகள்: வார்த்தை விளையாட்டு – **எம். இளவழகன்** 25

6. புலம் பெயர் இலக்கியங்களில் தமிழர் வாழ்வியல் **முனைவர் கே. கண்ணாத்தாள்** 32

7. நம்மாழ்வார் பாசுரங்களில் சமுதாய சிந்தனைகள் **முனைவர் கே. இரா. கமலாமுருகன்** 38

8. திருக்குறள் காட்டும் வாழ்வியல் கூறுகள் – **முனைவர். செ.காஞ்சனா** 43

9. கம்பனும் கண்ணதாசனும் – **ந.காருண்யா** 47

10. திருச்சிற்றம்பலம் திருமந்திரம் – **அறநெறித் தமிழ்ச்செல்வர் ச. குமரவேல்** 52

11. விருந்தின் சிறப்பு – **கு. சசிகலா** 57

12. தங்கப்பாவின் "பாட்டு வாழ்க்கை" – **முனைவர். பா.சரளாதேவி** 63

13. நாயகனும் நம்பியாரூராரும் – **முனைவர். பா.சரளாதேவி** 67

14. தமிழ் இலக்கியங்கள் கூறும் பரத்தமை – **ஜோ. சாந்தமூர்த்தி** 73

15. "தமிழ் வளர்ச்சியில் கணைக்கால் இரும்பொறையும், பொய்கையாரும்" – **முனைவர் சு.சிவகாமசுந்தரி** 80

16. திருமூலரின் அட்டாங்க யோகம் – **முனைவர். பா.சீனிவாசன்** 86

# நாயகனும் நம்பியாரூராரும்

முனைவர் பா.சரளாதேவி, உதவிப்பேராசிரியர்,
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
புதுச்சேரி - 605008.

சைவ சமயாச்சாரியருள் மூன்றாவதாக விளங்கிய சுந்தரர் குறுகிய காலம் வாழ்ந்தாலும் நிறைய கீர்த்தியைப் பெற்றார். ‘திருத்தொண்டர் தொகையைப்’ பாடி பெரியபுராணத்திற்கு வித்திட்டவர். நம்பி ஆருராக வலம் வந்த சுந்தரர் கயிலையில் தேவியாரின் தோழியர்களாக இருந்த அநிந்தை, கமலினி இருவரின் மீது கொண்ட காதலின் காரணமாக இறைவனே மூவரையும் பூவுலகிற்கு அனுப்பி பரவை நாச்சியார், சங்கிலி நாச்சியாராக தோன்றும்படி செய்து சுந்தரரின் விருப்பத்திற்கு வித்திட்டார். சித்தவடமடத்தில் நம்பியாரூரர் தலைமேல் கால் வைத்து சுந்தரருக்கு ஆசிவழங்கினார். சுந்தரர் பாடிய தேவாரப்பாடல்கள் ‘திருப்பாட்டு’ என்ற பெயரில் ஏழாம் திருமுறையாக தொகுக்கப்பட்டு பக்தர்கள் ‘சிவகதி’ அடைய வழிகாட்டுபவையாக விளங்குகின்றன.

## தூதர்

பக்தனின் பக்திக்கு ஆட்பட்ட இறைவன் பக்தனின் உள்ளக்கருத்தை மற்றவர்க்கு வெளிப்படுத்த தூதனாக செல்கிறார். சிற்றின்ப நிலையிலும், பேரின்ப நிலையிலும் சிவபெருமானே சுந்தரருக்கு தூதாகச் செல்கின்றார். மனிதனை சிற்றின்ப நிலையை கடந்து பேரின்ப நிலைக்கு கொண்டு செல்ல இறைவனின் இறையருள் பேரின்ப நிலைக்கு கொண்டு செல்ல இறைவனின் இறையருள் தேவைப்படுகிறது. இங்கே நாயகனாகிய இறைவன் சுந்தரராகிய நம்பியாரூராருக்கு இரு இன்பத்தை நல்க தன்னிலை மறந்து தூது செல்கிறார்.

# மாணிக்கவாசகர்

## இலக்கிய மாநாட்டு ஆய்வுக் கோவை

**தொகுதி - 1**

திருக்கயிலாயப் பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்து நான்காவது பட்டம்

**குருமகா சந்நிதானம்**

**ஸ்ரீ ல ஸ்ரீ**

**அம்பலவாண தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்**

**அருளாசியுடன்**

நடத்தப் பெற்ற பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை

கருத்தரங்கு இயக்குநர் - பதிப்பாசிரியர்
**முனைவர் இரா. கண்ணன்**
முதல்வர், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
அறந்தாங்கி

**அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அறந்தாங்கி**

**தொல்தமிழ் அறக்கட்டளை**

**அறிஞர் அண்ணா கல்லூரி - ஆரல்வாய்மொழி**

**பிப்ரவரி 2022**

அறிவாகி இன்பஞ்செய் தமிழே வாழி

மாணிக்கவாசகர் இலக்கிய மாநாட்டு ஆய்வுக்கோவை தொகுதி –1 ■ முதற் பதிப்பு – பிப்ரவரி 2022 ■ முனைவர் இராகவன் கண்ணன் ■ உரிமை: தொல்தமிழ் அறக்கட்டளை ■ பக்கம்: 448 ■ படிகள் : 125 ■ வெளியீடு: தொல்தமிழ் அறக்கட்டளை, சிவனருள் நிலையம், 3/401 வள்ளலார் தெரு, அண்ணா நகர், ஆவடி ஐ.ஏ.எஃப், சென்னை – 600 055.

விற்பனைக்கன்று

ISBN 978 - 93 - 82271 - 46 - 8

**THOL THAMIZH TRUST**

Sivan Arul Nilaiyam, 3/401, Vallalar Street,
Anna nagar, Avadi I.A.F., Chennai - 600 055

Ph: 044 - 2685 3134 www .tholtamizh.com

39. மாணிக்கவாசகரின் உவமைநலம்
**முனைவர் சி. குறிஞ்சி** 344

40. திருவாசகத்தில் மகளிர் ஆடல்
**முனைவர் த.ஜெஜலட்சுமி** 349

41. மாணிக்கவாசகரால் பாடல் பெற்ற
உத்தரகோசமங்கை – ஓர் ஆய்வு
**முனைவர் (திருமதி) எஸ். கேசவன்** 359

42. மாணிக்கவாசகரின்
திருவாகத்தில் அச்சப் பத்து
**முனைவர் கோ.சி. கோலப்பதாஸ்** 366

43. திருவாசகத்தில் திருவம்மானை
**கு. சங்கீதா** 372

44. திருக்கோவையார் – தமிழரின் சமூக
**அ. சதாசிவம்** 378

45. திருப்பெருந்துறையும் திருக்கழுக்குன்றமும்
**முனைவர் சி. சதானந்தன்** 384

46. பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்
காட்டும் குதிரை வகைகள்
**செ. சதிஷ்** 396

47. மாணிக்கவாசகர் வரலாறும் அவர்தம்
இறைமை உணர்வும்
**சே. சரவணன்** 403

48. வள்ளலாரின் பார்வையில்
மாணிக்கவாசகர்
**முனைவர் பா.சரளாதேவி** 411

49. புராணங்களில் திருவாதவூரர்
**சரஸ்வதி பாலசுப்பிரமணியன்** 416

# வள்ளலாரின் பார்வையில் மாணிக்கவாசகர்

48

முனைவர் பா.சரளாதேவி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தாகூர் அரசுக் கலை அறிவியல் கல்லூரி,
புதுச்சேரி - 605008.

'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்ற சிறப்புடைய, சைவச் சமய நூலான திருவாசகத்தை, வாதவூரராகிய மாணிக்கவாசகர் இயற்றியுள்ளார். இது எட்டாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. திருவாசகம் திருவருள் வாக்காக, திருவருள் உள்நின்று உணர்த்த, பசுகரணம் பதிகரணம் ஆகி, அதாவது, தன் செயல் அற்று, தான் அற்று, பின்பு நாதன் செயலான நிலையில் விளைந்த வாக்கே திருவாசகம் ஆகும். ஞானநெறியைப் பின்பற்றிய மாணிக்கவாசகர் 32 ஆண்டுகள் வாழ்ந்து, சிவநெறி பரப்பி, சிதம்பரத்தில் முக்தி அடைந்தார்.

சிவன் குருவடிவாகக் காட்சி அளித்து, திருவடி தீட்சை தந்து மறைந்த சிவபெருமானை மீண்டும் பெற நினைத்து, நினைந்து நினைந்து இறைவனின் பேரன்பையும் பெருங்கருணையையும் விளக்கும்வகையில் திருவாசகத்தை மாணிக்கவாசகர் படைத்துள்ளார்.

***'பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்பரிந்துநீ பாவியேனுடைய***
***ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய***
***தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே***
***யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்து அருளுவது இனியே'.***

சிவனின் பெருமையைப் பறைசாற்றும் திருவாசகத்தின் சிறப்பை உணர்ந்த போப் அவர்கள் திருவாசகத்தை மொழிபெயர்த்துள்ளார். சைவசமயம் தழைக்கவும் வேத சிவஆகம நெறிகள் விளங்கவும்